# பாலா ஹனுமான், பைரவர், பிரேத சர்க்கார் - ஆலயம்

## சாந்திப்பிரியா



( Only representative Illustration based on actual appearance )

பகவான் ஹனுமாரை வழிபடுவதில் மூலம் ஏழரை ஆண்டு சனி தோஷத்தினால் ஏற்படும் தீமைகள், மற்றும் ஒருவருக்கு ஏற்படும் இடையூறுகள் விலகும் என்பது நம்பிக்கை ஆகும். இதனால்தான் பகவான் ஹனுமான் வழிபாடு பல ஆயிரம் ஆண்டுகளாக பரவலாக

நடைமுறையில் உள்ளது. அதை போலவே பகவான் பைரவரை வழிபடுவதில் மூலம் தீய சக்திகளிலிருந்தும் சூனிய ஏவல்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும் என்பது பரவலான நம்பிக்கை ஆகும். ஆனால் பலரும் அறிந்திடாத செய்தி என்ன எனில் ராஜஸ்தானின் உள்ள ஒரு ஆலயத்தில் பேய்கள் மற்றும் தீய ஆத்மாக்களை கட்டுப்படுத்தி வைக்கும் தெய்வமான பிரேத சர்க்கார் என்று கூறப்படும் தெய்வம் அங்குள்ள பகவான் ஹனுமான் மற்றும் பகவான் பைரவருக்கு உதவியாக இருந்தவண்ணம் பேய் மற்றும் பிசாசுகளினால் அவதிப்படுபவர்கள், தீய சக்தி மற்றும் பேய், பிசாசுகளினால் அவதிப்படுபவர்களை குணப்படுத்துகிறார் என்பதே. ஆனால் பகவானாக பிரேத சர்க்கார் பற்றிய குறிப்பு மெஹந்திபூரில் உள்ள ஆலயத்தைத் தவிர வேறு எந்த புராணங்களிலோ அல்லது பிற ஹிந்து சமய நூல்களிலோ காணப்படவில்லை.

ராஜஸ்தானில் உள்ள தவுசா எனும் மாவட்டத்தில் உள்ள மெஹந்திபூர் என்று அழைக்கப்படும் இடத்தில் பகவான் பாலா ஹனுமான், பகவான் பைரவர் பாபா (உள்நாட்டில் பைரவ பாபா என அழைக்கப்படுபவர்) மற்றும் பகவான் பிரேத சர்க்கார் என்ற மூவரும் உள்ள, ஆயிரம் வருடத்துக்கு முற்பட்ட ஆலயம் ஒன்று உள்ளது. அதை உள்ளூர் மக்கள் பாலாஜி ஆலயம் என்று அழைக்கின்றார்கள். அங்குள்ள பிரதான தெய்வமான பாலா ஹனுமான் தம்முடன் பைரவர் மற்றும் பிரேத சர்க்கார் என்பவர்களின் துணையுடன் தீய ஆவி, சூனிய மந்திரங்களால் மற்றும் பேய்களால் பாதிக்கப்பட்ட மக்களை குணப்படுத்துகிறார்கள். பிரேத சர்க்கார் தனி சன்னதியில் அமர்ந்து கொண்டு அப்பாவிகளின் உடலில் புகுந்து கொண்டு

காரணம் இல்லாமல் அவர்களை துன்பப்படுத்தும் தீய ஆவிகளையும், பேய்களை துரத்தி அனுப்புகிறார்.

ஒருவரது உடலில் இருந்து வெளியேறும் ஜீவன் உடனடியாக தேவலோகத்துக்கு செல்லாதாம் . அது சிலகாலம், அதாவது அதனதன் பாவ புண்ணியர்களுக்கு ஏற்ப அங்கும் இங்கும் திரிந்தவண்ணம் பேய் மற்றும் பிசாசுகளுடன் உலாவிக் கொண்டு இருக்குமாம். அந்த நிலையில் அவை அனைத்தும்- ஜீவன், பேய், பிசாசு போன்ற அனைத்துமே பகவான் பிரேத சர்க்கார் பிடியில் இருக்குமாம் என்பது அங்கு கூறப்படும் கிராமியக் கதை ஆகும் . ஆக பிரேத சர்க்கார் என்பவர் அனைத்து பூதகணங்களின் அதிபதி ஆகின்றார்.

இந்த ஆலயத்தை பாலாஜி ஆலயம் என்று சிலர் குறிப்பிடுவதினால் மக்களிடையே குழப்பம் நேரிடுகின்றது. அதன் காரணம் பாலாஜி ஆலயம் என்றால் பொதுவாக திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தையே குறிப்பிடுவார்கள். இந்த ஆலயத்தில் உள்ள பைரவ பெருமான், பகவான் பாலா ஹனுமாருடைய தளபதியாக செயல்படுகின்றார். பொதுவாக நான்கு கைகளைக் கொண்டு காணப்படும் பைரவ பெருமான் சிவபெருமானின் அவதாரம் ஆகும். இங்குள்ள பைரவப் பெருமான் சிவப்பு நிற தோற்றம் கொண்டவராம் . அவர் உள்ள இடத்தில் எந்தவிதமான பேய் பிசாசுகள் மற்றும் தீய ஆவிகள் நுழைய முடியாது என்பதின் காரணம் அவர் மயானங்களில் வசிப்பவர். இந்த ஆலய மேன்மைக் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்ட வல்லுனர்களினால் அங்கு கூறப்படும் செய்தியைக் குறித்து தீர்மானமான எந்த முடிவுக்கும் வரமுடியவில்லையாம். ஒரு வடநாட்டு நாள் இதழில் வந்த செய்தி இது :

மேற்கோள்: -

இந்த ஆலயத்தில் நிவாரணம் கிடைக்கின்றது என்று பலர் கூறுகின்றனர். ஜெர்மனி, நெதர்லாந்து, எய்ம்ஸ் மற்றும் டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் , அறிஞர்கள் மற்றும் மனநல மருத்துவர்கள், நோயாளிகளுக்கு அமானுஷ்ய மற்றும் பாரம்பரிய தந்திரங்கள் எந்த அளவிலான மருத்துவ நிவாரணத்தை அளிக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கின்றனர்.

இந்த ஆராய்ச்சி திட்டத்தை இந்தியா மற்றும் ஜெர்மனி கூட்டாக மேற்பார்வையிடுகின்றன. இந்த திட்டத்திற்கான அடிப்படை வேலைகளைச் செய்வதற்காக சில மாணவர்கள் ஏற்கனவே தவுசாவில் உள்ள பாலாஜி ஆலயத்திற்கு வருகை தந்துள்ளதாக டெல்லி பல்கலைக்கழக மானுடவியல் துறை பேராசிரியர் பி.சி.ஜோஷி தெரிவித்தார்.

பேராசிரியர் பி.சி.ஜோஷி அவர்களின் கூற்றின்படி உலக அளவில் மனநல கோளாறுகள் மற்றும் அது போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு தரப்படும் பல்வேறு சிகிச்சை முயற்சிகளின் தன்மைகளையும் ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள், மருத்துவர்கள், மானுடவியலாளர்கள் மற்றும் அறிஞர்கள் அடங்கிய குழு பாலாஜி ஆலயத்தில் கிடைக்கும் சிகிச்சை மற்றும் சடங்குகளின் அம்சங்களையும் மதிப்பீடு செய்யும்.

(Ref: https://daily.bhaskar.com/news/RAJ-JPR-mehandipur-balaji-temple-of-rajasthan-international-team-searching-source-of-mag-4303103-NOR.html)

: மேற்கோள் முடிவு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடம் கரடுமுரடான நிலப்பரப்பில் இருந்திருந்த அடர்ந்த காடு என்று கூறப்படுகிறது. காடுகளைச் சுற்றி இருந்த அடர்ந்த புதர்களில் காட்டு விலங்குகள் இருந்தன. ஒருமுறை இந்த ஆலயத்தின் புரோகிதராக இருந்த ஸ்ரீ மன்ஹத் ஜி மகாராஜின் மூதையோர்களில் ஒருவரானவரும் ஆலயத்தின் முதல் பூஜாரியுமான ஸ்ரீ கோசைஜி மகாராஜ் ஒரு விசித்திரமான கனவைக் கண்டார். அரை தூக்கத்தில் எழுந்து காட்டில் முன்பின் தெரியாத ஒரு பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்த அவர் திடீரென அங்கே விசித்திரமான காட்சி ஒன்றைக் கண்டார். கைகளில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளை ஏந்திய ஆயிரக்கணக்கான நபர்கள் ஒருவர் பின்னால் ஒருவராக ஏதோ ஒரு இடத்தை நோக்கி அணிவகுத்து சென்று கொண்டு இருந்தார்கள் . அவர்களை தொடர்ந்து வந்த ராணுவ வீரர்களை தொடர்ந்து யானைகள் மற்றும் குதிரைகள் நடந்து வரும் சப்தமும் கேட்டது. அங்கு காணப்பட்ட பகவான் பாலா ஹனுமான் சிலைக்கு அருகே சென்று நின்று கொண்ட ராணுவத்தினர் பகவானின் சிலையை சுற்றி மூன்று முறை பிரதர்ஷணம் செய்த பின் அவர்கள் வந்த அதே பாதையில் திரும்பச் சென்று விட்டார்கள்.

ஸ்ரீ கோசைஜி மகாராஜ் அங்கு நடைபெற்ற காட்சிகளை பார்த்து ஆச்சரியப்பட்டார், அதேநேரம் பயந்து கொண்டு மீண்டும் தனது கிராமத்திற்கு திரும்பச் சென்று விட்டார் என்றாலும் அவரது கனவில் மீண்டும் மீண்டும் அதே நிகழ்வுகள் தோன்றின, அதே குரல்கள் கேட்டன. கனவில் அவர் முன் தோன்றிய பகவான் பாலா ஹனுமார் அப்பகுதியில் உள்ள மக்களின் நலனுக்காக தன்னை வணங்கும்படி கட்டளையிட்டார். ஆகையால், அடுத்த நாள் ஸ்ரீ கோசைஜி மகாராஜ் எழுந்து, முந்தைய இரவு அவர் சென்ற வழியை நினைவில் வைத்துக் கொண்டு அதில் நடந்து சென்று தனது

கனவில் கண்ட அதே இடத்தை அடைந்தார். அங்கு சென்றவர் பகவான் பாலா ஹனுமான் சிலை ஒரு பாறையில் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அதேசமயம், அவர் தனது கனவில் கேட்டதைப் போலவே அங்கு எழுந்த மணி ஓசைகள் ஒலியும் இருந்தன. ஆனால் விரைவில் மணி ஓசை நின்றுவிட்டது. உடனடியாக அங்கிருந்து கிளம்பி ஊருக்கு சென்று கிராம மக்களுக்கு தாம் கண்ட விசித்திர காட்சிகளை சொல்லியபின் அவர்களது கருத்துக்களை கேட்டவர் அவர்களுடன் சேர்ந்து மீண்டும் அங்கு சென்றபோது அங்கு குகையில் பாலா அனுமாரின் உருவில் இருந்த சிலையுடன் பகவான் பைரவர் மற்றும் பகவான் பிரேத சர்காருடைய சிலைகளையும் பார்த்தபின் அங்கேயே ஒரு சிறிய ஆலயம் அமைத்து அவர்களை வழிபடத் துவங்கினார்கள்.

ஒருமுறை அந்த ஆலயத்தை நிர்மூலமாக்க அங்கு படையெடுத்து வந்த முகலாய மன்னன் எத்தனை முயன்றும் அந்த சிலையை சேதப்படுத்தவும் முடியவில்லை, ஆலயத்தை தகர்க்கவும் முடியாமல் திரும்பச் சென்றுவிட்டான். இரண்டு குகைகளின் நடுவே உள்ள இந்த ஆலயத்தில் உள்ள மூன்று மூர்த்திகளின் சக்திகள் என்ன என்பதை அறியாமலேயே, அந்த மூவரின் சக்திகளினால் தாம் நலன் அடைவதாக நம்பிக்கொண்டு இங்குள்ள மக்கள் அவர்களை வழிபட்டு வணங்குகின்றார்கள்.

தீய ஆவி, பேய்கள் மற்றும் சூனியம் வைத்தவர்களை குணப்படுத்த மக்கள் இந்த ஆலயத்திற்கு அழைத்து வருகின்றார்கள். தீய ஆவிகள் புகுந்துள்ள உடலோடு ஆலயத்திற்கு வரும் மக்கள் தலைகீழாக தொங்க விடப்படுகின்றார்கள். ஏன் எனில் அப்படி செய்யும்போது பாதிக்கப்பட்டவர்கள் உடலில் புகுந்துள்ள தீய ஆவிகள் பகவான் பிரேத சர்க்கார் மற்றும் பகவான் பைரவாவுக்கு பயந்து

ஓடிவிடுகின்றன என்பது பொதுவான நம்பிக்கை. பகவான் பைரவர் தனது கருவறைக்குள் நுழைந்த தீய ஆவிகளுக்கு மரண தண்டனை வழங்குகிறார். தீய நபருக்கு அவரது மன நிலையைப் பொறுத்து உடனடியாக அல்லது விரைவில் நிவாரணம் கிடைக்கும்.

தீய ஆவிகள் புகுந்துள்ள மக்களின் உடலின் பல பாகங்களிலும் கனமான கற்களை வைத்திருப்பது, சிலரை சங்கிலியைக் கொண்டு கட்டி வைத்து இருப்பது, வேறு சிலருக்கு புனித நூல்களைப் படித்து மாந்தரிப்பது, மந்திரங்களை உச்சரித்து சிகிச்சை அழிப்பது போன்றவை இந்த ஆலயாத்தில் செய்யப்படுகின்றன. ஒருவரது நோயை குணப்படுத்தியவுடன், அது ஒருபோதும் மீண்டும் தோன்றுவதில்லை என்பது பொதுவான நம்பிக்கையாகும். அதனால் மேலும் மேலும் பாதிக்கப்பட்ட நபர்களை இங்கு சிகிச்சைக்கு கொண்டு வருகின்றார்கள். ஆலயத்திற்கு சிகிச்சைக்கு வரும் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று தெய்வங்களுக்கும் பிரசாதம் வழங்க வேண்டும். பிரசாதங்களில் அரிசி,உளுத்தம் பருப்பு மற்றும் லட்டு போன்றவை முக்கியமானவை. தீய சக்திகள் மற்றும் பேய்களால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமே குணப்படுத்துவதற்காக இந்த கோயில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் மத்தியில் ஒரு பொதுவான பயம் உள்ளது என்றாலும் இந்த ஆலயத்துக்கு தவறாமல் வருகை தரும் பலரும், தங்கள் வாழ்க்கையில் எந்த தீய சக்திகளாலும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக பகவான் பாலா ஹனுமான், பகவான் பைரவர் மற்றும் பிரேத சர்க்கார் ஆகியோருக்கு பிரார்த்தனை செய்கிறார்கள்.

இந்த ஆலயம் ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர் மற்றும் ஆல்வா நகரங்களில் இருந்து சுமார் 109 கிலோமீட்டர் தொலைவிலும் , கரோலி எனும் ஊரில் இருந்து 40 கிலோமீட்டர் தொலைவிலும்

உள்ளது . பல ஊர்களில் இருந்தும் நிறைய பஸ் வசதிகள் உள்ளன. மெஹந்திபூர் பாலாஜி ஆலயத்துக்கு வடநாட்டில் நகரங்களில் இருந்தும் எளிதில் செல்ல முடியும்.

# Bala Hanuman- Pred Sarkar- Bhairavar
# A unique temple

## Santhipriya



**( Only representative Illustration based on actual appearance )**

The worship of Lord Hanuman is well known to get rid of the evil effects of seven and a half year Sani Dosha which cause hurdles in ones life. The worship of Lord Hanuman is widely practiced for several thousands of years for the same. Similarly

the worship of Lord Bhairava is meant to get rid of from the ill effects of evil spirits and black magic spells. However what remain unknown in general has been the existence of Lord Pred Raja Sarkar who is stated to the King of Ghosts and Spirits and who is seated in this temple in Rajasthan to assist Lord Bala Hanuman and Lord Bhairava to cure those afflicted with the evil spirits and Ghosts. Reference of Lord Pred Sarkar is not found in any of the Puranas or other sacred Hindu texts except as told in the form of folklore in and around the Mehandipur Lord Balaji temple.

This temple is in the district of Dausa in Rajasthan called Mehandipur housing Lord Bala Hanuman, Lord Bhairava Baba (as locally called) and Lord Pred Sarkar. This temple is also called locally as Lord Balaji temple. Lord Bala Hanuman is the prime deity and his statue is stated to be thousands of years old as per the archeologists. The principal deity Lord Bala Hanuman is aided by two deputies, Lord Bhairava and Lord Pred Sarkar who cure people afflicted with the evil spirit and ghosts or affected by black magic spells. Those afflicted by evil spirit, ghosts, goblins, ghouls, evil eyed witches and suffering from black Magic when come to this temple and offer prayers as per the ritual practiced there, they are reportedly getting cured by the combined powers of Lord Bala Hanuman, Lord Bhairav Baba and Lord Pred Raja Sarkar, all of them seated in a separate sanctum. Lord Pred Sarkar is seated in the capacity of King of Ghosts and Spirits. The trio punish the evils spirits and demon ghosts who bother innocents for no reason.

It is generally believed that the souls of those dead roam in the air for some time in different forms including that of evil spirits and Ghosts till they get rebirth or reach Yama Log and depending on the extent of good and bad deeds carried by them and in the form of wandering souls they are believed to be under the custody of Pred Sarkar, so goes the folklore. Therefore it is claimed that Lord Pred Sarkar is the lord of the souls.

This temple is also called Lord Bala Hanuman temple or Lord Balaji temple though some get confused with the name Lord Balaji, because the name Lord Balaji is generally attributed to Tirupathi Lord Venkatachalapathi of Tirupathi temple in South India. Lord Bhairava is believed to perform the duty of a chieftain to Lord Bala Hanuman. As per legends, Lord Shiva has manifested as Lord Bhairava with four hands and here in this temple he is portrayed Red in colour. There is a general belief that none of the evil spirits, ghosts, goblins, ghouls, evil eyed witches can enter the place where Lord Bhairava stays because he is the manifestation of Lord Shiva and live in the cemeteries. Some researchers who continue to study the glory of this temple to unearth the facts could not arrive at any conclusive decision. A news item which appeared in a newspaper stated:

**Quote:-**

Many people claim to get relief here at the temple. Now, scientist, scholars and psychiatrists from Germany, Netherlands, AIIMS and Delhi University are trying to find how occult and traditional tricks provide medical relief to the patients.

The research project is jointly supervised by India and Germany. Some students are already visiting Balaji Temple at Dausa to do the groundwork for the project, said Professor PC Joshi, Department of Anthropology, University of Delhi.

According to Professor PC Joshi, the number of people suffering from mental disorders and problems is on the rise worldwide, and all efforts are on to understand the cause and various treatment methods. A team of scientists, doctors, anthropologists and scholars will evaluate all aspects of treatment and rituals at Balaji.
(Ref: https://daily.bhaskar.com/news/RAJ-JPR-mehandipur-balaji-temple-of-rajasthan-international-team-searching-source-of-mag-4303103-NOR.html)

**:-Unquote**

Thousands of years ago this place was reportedly a dense forest in a rugged terrain. Wild animals were wandering all over the forest. Once the ancestor of the priest Shri Manhat Ji Maharaj, and the first priest of this temple Shri GosaiJi Maharaj had a strange dream. He got up in half sleep and walked towards an unknown area in the jungle. There he saw a strange event going on. Thousands of individuals carrying lighted lamps were marching one behind the other in a row towards some place followed by soldiers. The sound of elephants and horses were also heard. The army stopped near an idol of Lord Balaji Maharaj, their chief got down, walked around the idol of Lord Bala Hanuman thrice along with his army of men when the temple bells began to ring continuously till they stopped and then

all of them went away in the same route by which they came.

Shri Gosaiji Maharaj was amazed to see all of them, felt scared and went back to his village but could not sleep the whole night as the same scene appeared again and again by way of a dream along with the same sounds of temple bells ringing. When he attempted to ignore it, Lord Hanuman appeared in the dream and ordered that he be worshipped for the welfare of the people in the area. Therefore next day Shri Gosaiji Maharaj got up and reached the same place which he saw in his dream. There he saw the statue of Lord Bala Hanuman carved out on a rock. Simultaneously he could clearly hear the sounds of bells for some time similar to what he heard in his dream and soon the ringing of the bell stopped. He then decided to go and tell the villagers on the strange phenomenon and rushed to the village. After taking the opinion of the villagers, he again went there along with them and saw the unique statue of Lord Bala Hanuman along with two more deities, Lord Bhairava Baba and Lord Pred Raj Sarkar. They then decided to worship them in the same cave which has been converted into a mini temple subsequently.

Once during the invasion of Muslim rulers, one of the Muslim Kings attempted to uproot and damage the idol. Miraculously, in spite of deploying heavy force, he could not even uproot the idol nor break it. The idol also remained undamaged and therefore tired of attempts he went away.

While the real magical power (Sakthi) of the three deities are unknown, the

devotees consider the trio to be a combined force and pay obeisance to all the three Gods equally in belief that they get cured of their ailments heree. The temple is in the midst of two tunnels.

People bring the persons possessed with evil spirit, ghosts and those suffering from black Magic spells to cure them. Once the affected persons enter the temple and hung upside down, the evil spirits run away fearing to Lord Pred Sarkar and Lord Bhairava, since the defiant evil when see Lord Bhairava, they run away. Lord Bhairav award death sentence to the evil for having entered his sanctum. Subsequently the evil possessed person gets relief instantly or sooner depending on his mental condition.

The ones possessed with evil spirit go through therapies like keeping heavy stones on various parts of their body, shackling the person with chain , reading holy texts, keeping stones on their body and chanting mantras as part of the treatment. Once cured of the problem, it never resurfaces is the general belief that brings more and more affected persons for the treatment here. A grieving person has to reach the temple and make offerings to all the three deities. The offerings include rice, Urud dal and Laddoos. Though there exist unknown fear amongst people who think that this temple has been meant to cure only those afflicted with evil spirits and ghosts, but still many regularly visit this temple to offer prayers to Lord Bala Hanuman, Lord Bhairava Baba and Lord Pred Sarkar in belief that they would not get affected by evil forces of any type.

**How to reach the temple:** The temple is 109 KM from the city of Jaipur and Alwar both in Rajasthan, 40 KM from Karoli, a small town near Jaipur. Many buses fly from all the places to reach the temple area. Mehandipur is well connected to all major cities of north India.